வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண்.3326/ஆ2/2024 நாள்: .12.2024

பொருள்: பள்ளிக் கல்வி-வேலூர் மாவட்டம்-2023-2024ஆம் கல்வியாண்டு-அரசு/அரசு உதவி பெறும்/சுயநிதி/மெட்ரிக் பள்ளி ஆதிதிராவிட இன மாணாக்கர்களுக்கு வழங்கப்படும் கல்வி உதவித் தொகை-மாணாக்கர்கள் வங்கிக் கணக்குடன் ஆதார் சீடிங் செய்ய தெரிவித்தல்-சார்பு.

பார்வை: வேலூர் மாவட்ட ஆதிதிராவிட மற்றும் பழங்குடியினர் நல அலுவலரின் கடித ந.க.எண்.கே6/162/2024 நாள்:22.11.2024

-----------

வேலூர் மாவட்டம் 2023-2024ஆம் கல்வியாண்டில் அரசு/அரசு உதவி பெறும்/சுயநிதி/மெட்ரிக் பள்ளிகளில் 9ஆம் மற்றும் 10ஆம் வகுப்பு பயிலும் ஆதிதிராவிடர் இன மாணாக்கர்களுக்கு வழங்கப்படும் ப்ரீ மெட்ரிக் (Pre Metric)கல்வி உதவித்தொகையினை மாணவர்கள் வங்கி கணக்குடன் ஆதார் சீடிங் செய்யப்படாததால் விடுவிக்க இயலாத நிலை உள்ளதாக பார்வையில் காணும் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, இணைப்பில் (GOOGLE SHEET LINK) உள்ள 1162 மாணாக்கர்களை தங்கள் வங்கி கணக்குடன் ஆதார் சீடிங் செய்ய அறிவுறுத்தும் படியும், வங்கி கணக்கு இல்லாத மாணாக்கர்களை இந்தியன் போஸ்டல் பேங்க் (Indian Postal Bank)-இல் புதிய வங்கிக் கணக்கு தொடங்க செய்து , மேற்காண் பொருள் சார்ந்து நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட விவரங்களை இணைப்பில் உள்ள GOOGLE SHEET LINK -இல் 23.12.2024-ஆம் தேதிக்குள் பதிவுகள் மேற்கொள்ள சார்ந்த பள்ளி தலைமையாசிரியர்கள், தனியார் பள்ளி தாளார்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இணைப்பு:

1. பள்ளியின் பெயர் பட்டியல்(மாணவர்களின் எண்ணிக்கையுடன்).
2. மாணாக்கர்களின் பெயர் பட்டியல்- GOOGLE SHEET LINK.

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர்

தலைமையாசிரியர்கள்/தாளாளர்கள்
அனைத்து வகை உயர்நிலை/மேல்நிலைப் பள்ளி
வேலூர்.